பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

12 09 2024 **THURSDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்றவர்களுடன், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் கலந்துரையாடினார்.

2. ஊழலற்ற நிர்வாகத்தை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. சீதாராம் யெச்சூரி இன்று புதுதில்லியில் காலமானார்.

4. வணிகவரி வருவாய் நடப்பாண்டில் கடந்த மாதம் வரை 55 ஆயிரத்து 807 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

5. ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா 3-1 என்ற கோல்கணக்கில் தென்கொரியாவை வென்றது.

>>>><<<<

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்றவர்களுடன், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் கலந்துரையாடினார.

பதக்கம் வென்றவர்களுக்கு பிரதமர் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

பாராலிம்பிக் போட்டியில் இதுவரை இல்லாத அளவிற்கு இந்தியா 7 தங்கம், 9 வெள்ளி, 13 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

>>>><<<<

பாதுகாப்பு தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று ஜோத்பூரில் பன்னாட்டு விமானப்படை பயிற்சியை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இலகுரக போர்விமானங்கள், ரேடார் உள்ளிட்ட பாதுகாப்புத் தளவாடங்கள் தற்போது உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு தளவாடங்களை இறக்குமதி செய்யும் நிலை மாறி, தற்போது நாம் ஏற்றுமதி செய்து வருவதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறினார்.

>>>><<<<

ஊழலற்ற நிர்வாகத்தை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இன்று கோவையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வரி வருவாய் முழுவதும் மக்கள் நலனுக்கான திட்டங்களுக்காக செலவிடப்படுவதாக கூறினார்.

பிரதமராக திரு. நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பொறுப்பேற்றிருப்பது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் திரு. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

**>>>><<<<**

மாநில அரசுகளின் நலன்களை பாதுகாக்கும் வகையில் நிதி பகிர்வு இருப்பதை நிதி ஆணையம் உறுதி செய்ய வேண்டும் என்று நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு வலியுறுத்தியுள்ளார்.

திருவனந்தபுரத்தில் பிஜேபி ஆட்சிப் பொறுப்பில் இல்லாத மாநிலங்களின் நிதியமைச்சர்கள் பங்கேற்ற மாநாட்டில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

ஒவ்வொரு நிதி ஆணையமும், தமிழகத்திற்கான நிதி ஒதுக்கீட்டை தொடர்ந்து குறைத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற நடவடிக்கை, நிதிச்சுமையை ஏற்படுத்துவதோடு, அரசின் முழுத்திறனுக்கு தடைக்கல்லாக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

இதனைக் கருத்தில் கொண்டு நிதி பகிர்வுக்கான வழிமுறைகளை நிதி ஆணையம் மாற்றியமைக்க வேண்டும் என்றும் திரு. தங்கம் தென்னரசு கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

உணவுத்துறையின் செயல்பாடுகள் குறித்து அத்துறைக்கான அமைச்சர் திரு. சக்கரபாணி இன்று சென்னையில் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

பொதுவிநியோகத் துறை மற்றும் சேமிப்புக் கிடங்குகளின் செயல்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

திரைத்துறையில் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை விசாரிப்பதற்கென உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி, அமைக்கப்பட்ட விசாகா குழுவில் பாதிக்கப்பட்டவர்கள் எந்த நேரத்திலும் புகார் தெரிவிக்கலாம் என்று மாநில அமைச்சர் திரு. சாமிநாதன் கூறியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கென தொலைபேசி எண்களும் அறிவிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இந்த குழுவிடம் தெரிவிக்கும் புகார்கள் மீது உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

வணிகவரி வருவாய் நடப்பாண்டில் கடந்த மாதம் வரை 55 ஆயிரத்து 807 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

இது, கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் ஆறாயிரத்து 91 கோடி ரூபாய் கூடுதலாகும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சரக்கு மற்றும் சேவை வரி வசூல் 31 ஆயிரத்து 338 கோடி ரூபாயாக உள்ளதாகவும், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17 சதவீதம் அதிகம் என்றும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>><<<<

அமெரிக்காவில் பயணம் மேற்கொண்டுள்ள காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி, சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்து வருவதாக பிஜேபியின் மாநில ஒருங்கிணைப்பாளர் திரு. எச். ராஜா கூறியுள்ளார்.

இன்று மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திரு. ராகுல்காந்தியின் இந்த செயல்பாடுகள் கண்டிக்கத்தக்கது என்றார்.

தேசிய கல்விக் கொள்கையை தமிழக அரசு ஏற்க மறுப்பதற்கான காரணங்களை தெரிவிக்க வேண்டும் என்றும் திரு. எச். ராஜா வினவினார்.

>>>><<<<

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. சீதாராம் யெச்சூரி இன்று புதுதில்லியில் காலமானார். அவருக்கு வயது 72.

சுவாசக்கோளாறு காரணமாக பாதிக்கப்பட்டு, புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, கடந்த சில தினங்களாக சிகிச்சை பெற்று வந்த அவர், இன்று பிற்பகல் 3 மணியளவில் உயிரிழந்தார்.

பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக சீதாராம் யெச்சூரியின் உடல் புதுதில்லியில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நாளை மறுநாள் காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர், சீதாராம் யெச்சூரியின் விருப்பத்தின்படி அவரது உடல் மருத்துவ ஆராய்ச்சிப் பணிகளுக்காக எய்ம்ஸ் மருத்துவமனைக்கு வழங்கப்படுகிறது.

சீதாராம் யெச்சூரியின் மறைவுக்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

>>>><<<<

மத்திய அரசு அறிவித்துள்ள 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் அனைவருக்குமான மருத்துவக் காப்பீட்டு திட்டம், பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

பல்வேறு நோய்களுக்காக சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு இந்த திட்டம் வரப்பிரசாதமாக அமைந்துள்ளதாக நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - கருத்தாளர்கள் 80 செகண்ட்ஸ்)

>>>><<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட்-செந்தாமரைக்கண்ணன் 44 செகண்ட்ஸ்)

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

மதுரை மாநகராட்சி பகுதிக்கு உட்பட்ட வெள்ளிவீதியார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கலையரங்க மேடையை மாநில அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் இன்று திறந்து வைத்தார்.

>>>><<<<

நாமக்கல்லில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதக்கங்களை வழங்கினார்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா 3-1 என்ற கோல்கணக்கில் தென்கொரியாவை வென்றது.

சீனாவின் **Hulunbuir**–ல் நடைபெற்ற இப்போட்டியில் இந்திய அணியின் கேப்டன் ஹர்மன்ப்ரீத் சிங் இரண்டு கோல் அடித்தார். **Araijeet singh** ஒரு கோல் அடித்தார்.

>>>><<<<

வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tharun Mannepalli** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-7, 23-21 என்ற செட்கணக்கில் பின்லாந்தின் **Joakin Oldorff** –ஐ வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவுகளில் இந்தியாவின் **Dhruv Kapila – Tanisha Crasto** இணையும் சத்திஷ்குமார் கருணாகரன் – **Aadya Variyath** இணையும் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன..

**>>>>end<<<<**